# 50 நாள் உபவாச ஜெபம்
## ஜெப குறிப்புகள் #1

### ஜெப கவனம்: மணிப்பூர் கலவரம்

1. 120-க்கும் அதிகமான மக்கள் உயிர் இழந்துள்ளனர். சொந்த பந்தங்களை இழந்தவர்களின் குடும்பங்களின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்!
2. தங்கள் இருப்பிடத்தை விட்டு புலம்பெயர்ந்த 40,000-க்கும் அதிகமான மக்களுக்காக ஜெபிப்போம். பலர் நிவாரண முகாம்களிலும், சிலர் உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். அண்டை மாநிலங்களுக்கும் பலர் சென்று விட்டனர்!
3. திருச்சபைகள், அரசாங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக செய்யப்படுகின்ற நிவாரணப் பணிகள் சரியாக நடந்திட ஜெபிப்போம். மக்களின் எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்!
4. பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் தவிக்கும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருக்க ஜெபிப்போம்!
5. மாதாந்திர வருவாயைக் கொண்டுவரும் குடும்பத் தலைவர்களுக்காக ஜெபிப்போம். இந்தக் கலவரத்தினால் வேலைகளையும் தொழிலையும் இழந்தோர் பல ஆயிரம்!
6. 200-க்கும் அதிகமான திருச்சபைக் கட்டிடங்கள் எரிக்கப்பட்டு அல்லது இடிக்கப்பட்டுள்ளன. சிதறடிக்கப்பட்ட விசுவாசிகள் தாங்கள் தங்கும் இடங்களில் ஓர் நல்ல சபை ஐக்கியத்திற்குள் வர ஜெபிப்போம்!
7. மணிப்பூர் மாநிலத்தில் சமாதானமும் சீர்நிலைமையும் மீண்டும் திரும்ப ஜெபிப்போம். அரசியல் தலைவர்களும், அரசாங்கமும் நீதியாய் செயல்பட ஜெபிப்போம்!
8. இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஓர் தெய்வீக இடைபடுதல் உண்டாக ஜெபிப்போம். தேவனின் உன்னத நோக்கங்கள் வெளிப்படவும், செயல்படவும் ஜெபிப்போம்!
9. பாதிக்கப்பட்ட மக்கள்... இந்த நெருக்கத்திலும்... தேவன் தர விரும்பும் <u>நம்பிக்கை, எழுப்புதல், தேவ திட்டம்</u> ஆகிய காரியங்களை அறிந்திட, அனுபவித்திட ஜெபிப்போம்!
10. நாம் ஜெபித்து வருகிறபடி, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலிருந்து ஒரு மாபெரும் அருட்பணி அலை எழும்பிட ஜெபிப்போம். இந்தியாவின் வடக்குப் பகுதியில் உள்ள சந்திக்கப்படாத எல்லைகளில் இவர்கள் களம் இறங்கி ஒரு தாக்கத்தை ஏற்படுத்த ஜெபிப்போம்!